**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

~~(Under Section 154 Cr.P.C.)~~

~~(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)~~ 28/9

C 8044344

**UNDER SECTION 173 BNSS**

1. District மாவட்டம் : Theni District PS: காவல்நிலையம்: V&AC, Theni Year: ஆண்டு 2024 FIR No: மு.த.அ. எண் 03/2024 Date: நாள் 25/9/2024

2. (i) Act சட்டம்: PC Act, 1988 as amended by Sections பிரிவுகள்: 7
   (ii) Act சட்டம்: the PC (Amendment) Act, 2018 Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் 20/9/2024 Date to : நாள் வரை and 25/9/2024
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 25/9/2024 Time நேரம் : 15.00 Hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 25/9/2024 Time நேரம் : 16.30 Hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer typed petition

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் About 45 kms South west
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி O/o the Village Panchayat, Surulipatti Village, Theni District.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் District : மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் R.V. Sivananthan (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. Veeramani
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 1950 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Farmer (g) Address : முகவரி No. 78/2, Main Bazaar street, Annanji @ Oonjampatti, Theni.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

   Tr. Chandrasekaran, Panchayat Secretary, Surulipatti Village Panchayat, Theni District.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

   —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

-Computer typed Separate sheet attached-

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS...............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ................................ பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

[signature] 25/9/2024. [signature] 25/9/2024

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
25/9/2024 / 18.30 hrs.

Name: பெயர் ..... த.ஜெயப்பிரியா.....
Rank: நிலை ..........காவல் ஆய்வாளர்.........No. எண் ..........

12. F.I.R. contents (Attach separate sheet if required):

முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்) தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.03/2024-ன் முதல் தகவல் அறிக்கையின் தொடர்ச்சி.

**சமர்ப்பிக்கப்படுகிறது:** தேனி, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, காவல் ஆய்வாளர் ஆகிய நான் இன்று 25.09.2024-ம் தேதி 15.00 மணிக்கு காவல் நிலையத்தில் இருந்தபோது தேனி மாவட்டம், தேனி, அன்னஞ்சி @ ஊஞ்சாம்பட்டி, மெயின் பஜார் தெரு, எண்.78/2 என்ற முகவரியில் வசிக்கும் திரு.வீராமணி என்பவரின் மகன் திரு.R.V.சிவானந்தன் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த எழுத்து மூலமான புகாரின்பேரில் கீழ்க்கண்ட முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்படுகிறது. மேற்கண்ட புகாரின் விபரம் பின்வருமாறு:- நான் மேற்கண்ட முகவரியில் எனது மனைவியுடன் குடியிருந்து வருகிறேன். எனது சொந்த ஊர் சுருளிபட்டி ஆகும். எங்களுக்கு ரமேஷ் என்ற ஒரு மகன் உள்ளார். அவர் சுருளிபட்டியில் விவசாயம் செய்துகொண்டு அவரது குடும்பத்துடன் வசித்து வருகிறான். நான் உத்தமபாளையம் ஒருங்கிணைந்த நீதிமன்றத்தில் O.S.No.4/2015ன் படி தொடர்ந்த வழக்கின் தீர்ப்பின்படி கம்பம் தாலுகா சுருளிபட்டியில், வார்டு நம்பர் 4, கல்ரோடு, கதவு எண்: 575 என்ற முகவரியிலுள்ள வீட்டை கடந்த 02.02.2018-ம் தேதி ஆவண எண்: 502/2018 மூலம் என் பெயரில் கிரையம் பெற்றேன். மேற்படி வீட்டிற்கு வீட்டுவரி ரசீது என் பெயரில் மாற்றம் செய்து தர சுருளிப்பட்டி பஞ்சாயத்து ஆபிசில் செக்ரட்டரி திரு.சந்திரசேகரன் என்பவரிடம் கடந்த 2023-ம் ஆண்டு டிசம்பர் மாதத்தில் ஒருநாள் விண்ணப்பம் கொடுத்தேன். அதன்பிறகு நான் பல முறை சென்று செக்ரட்ரியைப் பாரத்தும் சுமார் 7 மாதங்களுக்கு மேல் ஆகியும் வரி போட்டு தராமல் என்னை அலையவிட்டார். அதனால் நான் கடந்த ஆகஸ்ட்-2024ம் மாதம் சுருளிப்பட்டியில் "உங்கள் ஊரில் உங்களுடன் முதலமைச்சர் திட்டம்" கலெக்டர் தலைமையில் நடைபெற்றபோது நேரில் கலந்துகொண்டு கலெக்டரிடம் எனது வீட்டிற்கு வரி விதிப்பு செய்து தர கேட்டு மனு ஒன்றைக் கொடுத்தேன். அதன்பிறகு நான் பஞ்சாயத்து அலுவலகம் சென்று எனது மனு சம்பந்தமாக கேட்டபோது எனது மனு கிடைக்கவில்லை என்று கூறிவிட்டார். அதனால் கடந்த செப்டம்பர் 2-ம் தேதி தேனியில் நடைபெற்ற கலெக்டரின் குறை தீர்க்கும் நாளில் கலந்துகொண்டு மேற்படி வீட்டிற்கு எனது பெயரில் வீட்டுவரி ரசீது பெயர்மாற்றம் செய்து தர மீண்டும் ஒரு நினைவூட்டல் மனு கொடுத்தேன். அந்த மனு நடவடிக்கைக்காக கம்பம் ஊராட்சி ஒன்றிய பி.டி.ஒ விற்கு

அனுப்பப்பட்டது. அதன் பிறகு நான் பி.டி.ஒ அவர்களை கடந்த 18.09.2024-ம் தேதி கம்பம் யூனியன் ஆபீஸ் சென்று பார்த்தேன். அப்போது அவர் அந்த அலுவலகத்திலிருந்த எனது விண்ணப்பத்தை எடுத்து, எனது பெயரில் வரி விதிப்பு பெயர் மாற்றம் செய்து ரசீது வழங்குமாறு சுருளிப்பட்டி ஊராட்சி செயலர் அவர்களுக்கு உத்தரவிட்டு குறிப்பாணை தயார் செய்து என்முன்னிலையில் அப்போது அங்கு ஆஜரிலிருந்த மேற்படி சுருளிப்பட்டி ஊராட்சி செயலர் திரு.சந்திரசேகரனுக்கு வழங்கினார். அதன் நகல் ஒன்றை எனக்கும் கொடுத்தார். அதன்பிறகு நான் இது சம்பந்தமாக சுருளிப்பட்டி பஞ்சாயத்து செக்ரட்ரி திரு.சந்திரசேகரன் அவர்களை கடந்த 20.09.2024-ம் தேதி காலை சுமார் 10.00 மணிக்கு அவரது அலுவலகத்தில் சந்தித்து வரிவிதிப்பு சம்பந்தமாக மேற்படி குறிப்பாணையை நினைவுபடுத்தி கேட்டேன். அதற்கு அவர் நீங்கள் எங்கு போய் சொன்னாலும் நான் தான் உங்களுக்கு எல்லா ஏற்பாடும் செய்து பெயர் மாற்றி வரி ரசீது போட்டு தரமுடியும் என கூறி, இரண்டு அரையாண்டுக்கும் சேர்த்து வரியைக் கணக்கிட்டு, அந்த தொகை எவ்வளவு என்று பார்த்து ரசீது போடுவதற்கு ரூ.10,000/- தனியாக கொடுக்கவேண்டும் என்று கூறினார். நான் அந்த பணம் அரசாங்கத்திற்கு கட்டவேண்டிய பணமா என கேட்டதற்கு, அது வரி ரசீது போட்டு தர ஏற்பாடு செய்ய ஆபீஸ் செலவுக்கு கொடுக்கவேண்டிய பணம் என கூறினார். நான் என்ன செய்வதென்று தெரியாமல் வந்துவிட்டேன். அதன்பிறகும் வரிவிதிப்பு செய்வதில் தாமதம் ஏற்பட்டதால் இன்று (25.09.2024) காலை சுமார் 10.30 மணிக்கு நான் மீண்டும் பஞ்சாயத்து செக்ரட்டரி திரு.சந்திரசேகரனைப் பார்த்து கேட்டபோது அவர் முதலில் நான் கேட்ட ரூ.10,000/- கொண்டுவந்திருக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு நான் நீதிமன்றம் மூலம் கிரையம் பெற்ற சொத்திற்கு, வரி எவ்வளவு என்று சொல்வதற்கே, இவ்வளவு பணம் கேட்கிறீர்களே என சொன்னேன். அதற்கு அவர் 2,000 ரூபாயைக் குறைத்துக்கொண்டு, ரூ.8,000/- உடன் நாளை 26.09.2024-ம் தேதி காலையில் வந்து பார்த்து கொடுத்தால் தான் உங்களுக்கு வரிவிதிப்பு எவ்வளவு என்று சொல்லி ரசீது போட்டு கொடுக்க முடியும் இல்லாவிட்டால் நீங்கள் அலையவேண்டியது தான் என்று கறாராக கூறிவிட்டார். அதன்பிறகு நான் வீட்டிற்கு வந்து யோசித்துப் பார்த்ததில் நீதிமன்றம் மூலம் கிரையம் செய்த எனது பெயரிலான வீட்டிற்கு பெயர் மாற்றம் செய்து வரிவிதித்து, ரசீது பெற ஏற்பாடு செய்ய சுருளிப்பட்டி பஞ்சாயத்து செக்ரட்டரி திரு. சந்திரசேகரன் அவர்களுக்கு லஞ்சமாக பணம் ரூ.8,000/- கொடுத்து பெற எனது மனம் விரும்பாததால் அவர் மீது நடவடிக்கை எடுக்கக் கேட்டு இந்த புகாரை அளிக்கிறேன். அத்துடன் மேற்படி திரு. சந்திரசேகரன் லஞ்சமாகக் கேட்ட

பணம் ரூ.8,000/-ஐயும் கொண்டு வந்துள்ளேன். இத்துடன் 02.09.2024ம் தேதி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் கொடுத்த எனது மனு நகல் மற்றும் 18.09.2024ம் தேதியிட்ட கம்பம் ஊராட்சி ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர் (கி.ஊ) அவர்களின் குறிப்பாணை நகல் ஆகியவற்றையும் இணைத்துள்ளேன். நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன். இப்படிக்கு Sd/- XXXXX (**R.V.**சிவானந்தன், 25.09.2024)

Sir, Received this complaint on 25.09.2024 at 15.00 hrs. A confidential verification was conducted in respect of the complaint and the complainant through sources and found to be genuine and good respectively. The reputation of the accused was also verified and found to be bad. Since, a prima facie case is made out in the complaint and after getting oral permission from the Superintendent of Police, Southern Range, Vigilance and Anti-Corruption, Chennai, a case in Theni, Vigilance and Anti-Corruption Cr.No.03/2024, u/s 7 of the PC Act, 1988 as amended by the PC (Amendment) Act, 2018 was registered on 25.09.2024 at 16.30 hrs. Sd/- (C.Jeyapriya (25.09.2024), Inspector of Police, V&AC, Theni).

The original FIR along with the original complaint of Tr.R.V.Sivananthan, S/o.Veeramani, No.78/2, Main Bazaar Street, Annanji @ Oonjmapatti, Theni, Theni District is sent to the Chief Judicial Magistrate/ Special Judge for PC Act Cases, Theni District and copies are sent to the superior officers concerned.

C.Jeyapriya 25/9/2024

(C.JEYAPRIYA)
Inspector of Police,
Vigilance and Anti-Corruption,
Theni Detachment.